**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**தேதி: 22/10/2024**

**STC.No. 2512/2019**

**PW1 – தமிழ்செல்வி க/பெ. கந்தசாமி**

**குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத, படிக்க தெரியும். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஒரு மகன் உள்ளார். அவர் எம்.பில் படித்துள்ளார். 2019ம் ஆண்டு என்னுடைய மகன் நான் பங்குதாரராக உள்ள பள்ளியில் பணி செய்துகொண்டிருந்தார். ஆஜர் எதிரி என்னுடைய கணவரின் மாணவர் ஆவார். என்னுடைய கணவர் ஆசிரியராக இருந்தபோது அவரிடம் மாணவனாக ஆஜர் எதிரி படித்தாரா அல்லது என் கணவர் வேலை செய்த பள்ளியில் எதிரி படித்தாரா என்றால் என்னுடைய கணவரிடம் எதிரி மாணவராக படித்துள்ளார். ஆஜர் எதிரி என்னுடைய கணவரிடம் படிக்கவில்லை என்றாலும், என் கணவர் வேலை செய்த பள்ளியில்தான் படித்தார் என்றாலும் அது சரியாக எனக்கு தெரியவில்லை.

ஆஜர் எதிரி எங்களுக்கு உறவினர் இல்லை என்றால் சரிதான். குடும்ப நண்பரும் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் வீட்டு விஷேசத்திற்கு எதிரி வந்தததில்லை. எதிரி வீட்டு விஷேசத்திற்கு நாங்கள் சென்றதில்லை. எதிரி எந்த ஊரில் திருமணம் செய்தார் என்றும் அவருக்கு எந்த குழந்தை உள்ளது என்றும் எனக்கு தெரியாது. எதிரி எந்த ஊரில் வசித்து வந்தார் என்றால் ஸ்ரீரங்கத்தில் குடியிருப்பதாக எதிரி சொன்னார். முழு முகவரி எனக்கு தெரியாது. எதிரி சொல்லவில்லை. 20.03.2019ம் தேதி மதியம் எதிரிக்கு நான் பணம் கொடுத்தேன்.

நேரம் ஞாபகமில்லை. ரூபாய் பத்து லட்சம் கொடுத்தேன். 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன். மீதி ஞாபகமில்லை. மேற்படி விவரங்களை வழக்கறிஞர் அறிவிப்பில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தேதி சொல்லியுள்ளேன், நேரம், இடம், மற்றும் ரூபாய் நோட்டுக்களின் விவரம் சொல்லியுள்ளேனா என்று ஞாபகமில்லை. நான் உண்மையிலேயே பணம் கொடுத்திருந்தால் மேற்படி விவரங்களை வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியிருப்பேன் என்றாலும் கொடுக்கவில்லை என்பதால்தான் வழக்கறிஞர் அறிவிப்பில் மேற்படி விவரங்களை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

என்ன தேவைக்காக எதிரி பணம் வேண்டும் என்று கேட்டார் என்றால் அவசர தேவை என்று சொன்னார். என்ன தேவைக்காக பணம் வேண்டுமென்று கேட்டேன். அவர் எதற்காக தேவைப்படுகிறது என்று சொல்லவில்லை. பணம் கொடுக்கும்போது நானும், எனது கணவரும், எதிரியும் இருந்தோம். பணம் கொடுக்கும்போது எனது கணவர் கூட இருந்த விவரத்தை நான் வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லவில்லை. நான் உண்மையிலேயே பணம் கொடுத்திருந்தால் மேற்படி விவரங்களை வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியிருப்பேன் என்றாலும் கொடுக்கவில்லை என்பதால்தான் வழக்கறிஞர் அறிவிப்பில் மேற்படி விவரங்களை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வீட்டில்தான் உள்ளேன். எனக்கு மூன்று வங்கிகளில் வங்கி கணக்கு உள்ளது. 2019ம் ஆண்டு என்னுடைய வங்கி கணக்கில் எவ்வளவு தொகை இருந்தது என்று ஞாபகமில்லை. என்னுடைய வங்கி கணக்கில் அதிகபட்சமாக எவ்வளவு தொகை இருந்திருக்கும் என்றால் எனது கணவர்தான் பணம் போட்டு, எடுப்பார்.

நான் எங்கள் வீட்டு மாடியில் வீடு கட்டுவதற்காக ரெப்போ வங்கியில் ரூபாய் 17 லட்சம் லோன்போட்டு பணம் வாங்கி வைத்திருந்தேன். அதில் எதிரிக்கு பணம் கொடுத்தேன். வங்கியில் இருந்து லோன் எடுத்து எத்தனை நாட்களுக்கு கழித்து எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. உண்மையிலேயே எதிரிக்கு நான் பணம் கொடுத்திருந்தால் எனக்கு சரியான நாள் தெரிந்திருக்கும் என்றாலும், பணம் கொடுக்கவில்லை என்பதால்தான் ஞாபகமில்லை என்று பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. வீட்டை அடமானம் வைத்து ரெப்போ வங்கியில் பணம் வாங்கினேன். எதிரி கைமாற்றாகத்தான்பணம் கேட்டார், வட்டிக்கு கேட்கவில்லை. ஒருமாதத்தில் திருப்பி கொடுத்துவிடுவதாக சொன்னார். கடன் கொடுக்கும்போது எதிரியிடமிருந்து புரோநோட், செக், பத்திரம் எதுவும் எழுதி வாங்கவில்லை. நம்பிக்கையில் கொடுத்தோம். ரூபாய் 10 லட்சம் பெரிய தொகையை எழுதி வாங்காமல் கொடுத்திருக்க மாட்டேன் என்றாலும் கொடுக்காததால்தான் நான் எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பெயரில் சொந்தமாக கார் இல்லை. நாங்கள் கார் வைத்துள்ளோம்.

லோன் எந்த தேதியில் வாங்கினேன் என்றால் 2019ம்ஆண்டு வாங்கினேன். 2019ம் ஆண்டே எதிரிக்கு பணம் கொடுத்தேன். 2019ம் ஆண்டுக்கு முன்பு எந்த லோனும் நான் வாங்கவில்லை. 25.04.2018 அன்று நான் ரெப்கோ வங்கியில் பணம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் பணத்தை என்னுடைய மகன் பிரவீன்குமாரின் வேலைக்காக மதுரையை சேர்ந்த சுந்தரபாண்டியன் என்பவரிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் பணம் கொடுத்தேன். நான் சரவணகுமாரிடம் பணம் கொடுத்து அதை சுந்தரபாண்டியனிடம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சுந்தரபாண்டியனை எனக்கு யார் என்று தெரியாது. சரவணகுமார்தான் என் கணவரிடம் படித்த மாணவர் என்றால் தெரியாது. சரவணகுமாரிடம் பணம் கொடுத்தது சம்பந்தமாக திருச்சி எதிரி அலுவலகத்தில்வைத்து சரவணகுமார், நான், எனது கணவர் சமாதானம் பேசும்போது எதிரி அலுவலகத்தில் இருந்து 29 செக் புக்கை நான் எடுத்துவந்துவிட்டேன் என்றால்சரியல்ல. இந்த விவரம் வழக்கை போட்ட பிறகுதான் எதிரிக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல.

அதனால்தான் எதிரி வங்கியில் செக் காணாமல் போனதால் ஸ்டாப் பேமெண்ட் கொடுத்தார் என்றால் தவறு. எதிரி என்னிடம் பணம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. சரவணகுமாரிடம் கொடுத்த பணத்திற்காக எதிரியின் காசோலையை போட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியின் கையெழுத்துஇல்லை என்றாலும், காசோலையை எதிரி பூர்த்தி

செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியின் கையெழுத்தை நானே போட்டுக்கொண்டேன் என்றாலும், காசோலையை பூர்த்தி செய்துகொண்டேன் என்றாலும் சரியல்ல. எதிரி நல்ல வேலை செய்து மாதம் ரூ. 80,000/– சம்பாதிக்கிறார் என்றாலும், என்னிடம் கடன் வாங்க அவருக்கு அவசியமில்லை என்றால்சரியல்ல. எதிரி கடன் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விருதுநகர் குற்ற பிரிவில் சுப்பிரமணியன் என்பவர் சுந்தரபாண்டியனுக்கு எதிராக புகார் கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியாது. நான் சரவணகுமாரிடம் பணம் கொடுத்துவிட்டு எதிரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வீட்டில் சி.சி.டி.வி கேமரா இல்லை. நான் எதிரிக்கு பணம் கொடுத்தாக சொல்லும் நேரத்தில் எதிரி அலுவலகத்தில் பணியில் இருந்தார் என்றால் சரியல்ல. எனக்கு சாதகமாக தீர்ப்பு வரும் என்பதற்காக ரெப்கோ வங்கியில் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன்ள ன்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Sd/-.

Judicial Magistrate No.I,
Perambalur.